இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.
**MCOP.No.161/2025 ம.சா.**1

பெயர். திருமதி ஆச்சியம்மாள் க/பெ. தேவராஜ்

கிராமம். நாகப்பட்டினம் வயது. 66

நாள்.06.08.2026 தொழில். வீட்டுக்குடித்தனம்

நம்பர்.--

**2026** -ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06-ந் தேதி **வியாழக்கிழமை** Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி **திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,** தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் உண்மை என கூறப்பட்டவைதான். எனவே நான் தாக்கல் செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை சாட்சியமாக பாவித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு **மனுதாரர் தாக்கல்** செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலம் **மசா.1ன்** முதல் விசாரணையாக அனுமதிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ. 1 | 13.08.2025 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ. 2 | 12.08.2025 | இந்த விபத்தில் காயம்பட்ட நான் நாகப்பட்டினம் அரசு மருத்துவ கல்லூரிமருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் | நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.3 | 03.09.2029 | இந்த விபத்தில் காயம்பட்ட நான் நாகப்பட்டினம் அரசு மருத்துவ கல்லூரிமருத்துவமனையில் சிகிச்சைக்கு பின்னர் விடுவிக்கப்பட்டதறக்கான டிஸ்சார் சம்மரி | அசல் |
| ம.சா.ஆ. 4 | -- | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.5 | -- | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு, 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வழக்கப்பட்ட காப்பீட்டு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.6 | -- | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுனர் உரிமம் | நகல் |
| ம.சா.ஆ. 7 | -- | எனக்கு இந்த விபத்தில் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்றதற்கான புகைப்படம் | நகல் |
| ம.சா.ஆ.8 | -- | ஆதார் அடையாள அட்டை | நகல் |
| ம.சா.ஆ.9 | -- | வங்கி கணக்கு புத்தகம் | நகல் |
| மசாஆ.10 | -- | விபத்து சமயத்தில் நான் சென்ற வாகனத்தை ஓட்டிய எனது மகனின் ஓட்டுனர் உரிமம் (அசலுடன் சரிப்பார்க்கப்பட்ட நகல், அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன். ) | நகல் |

| | | | |
|---|---|---|---|
| நீமசாஆ.1 | -- | என்னை நாகப்பட்டினம் மாவட்ட மருத்துவ குழுவால் பரிசோதனை செய்து எனக்கு ஏற்பட்ட காயங்களின் ஊனத்தின் தன்மை 20% பகுதி ஊனம் என்று வழங்கப்பட்ட ஊன மதிப்பீட்டு சான்றிதழ் | அசல் |

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை.**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை. இல்லை.**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் அமர்ந்து சென்ற வாகனத்திற்கு பதிவு சான்று உள்ளதா என்றால் உள்ளது. விபத்து சமயத்தில் நான் அமர்ந்து சென்ற வாகனத்திற்கு பதிவு சான்று இல்லை என சொல்லி போலிசார் அதனை பரிமுதல் செய்துவிட்டார்கள் என்று சொன்னால் எனக்கு நினைவில்லை. ஓர் புதிய வாகனம் 15 வருடங்களுக்கு பின்னர் தகுதி சான்று பெற்று புதுப்பிக்கப்பட்டால் மட்டுமே பொது சாலையில் இயக்க வேண்டுமென்றும், ஆனால் நான் பயணம் செய்த வாகனம், வாகனத்தின் பதிவு காலவதி ஆகிவிட்டதால், தகுதி சான்று பெற்று புதுபிக்கப்படாததல் அதை பொது சாலையில் இயக்க தகுதி அற்றது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பொது சாலையில் இயக்க தகுதியற்ற வாகனம் என்பதால்தான் நாங்கள் சென்ற வண்டியை போலிசார் கைப்பற்றி இன்றுவரை காவல் நிலையத்தில்தான் உள்ளது என்றும், அதனை மோட்டார் வாகன ஆய்விற்குகூட உட்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் சென்ற வண்டி புதிய வண்டி, நான் சொல்லக்கூடிய விபரம் தவறு என்றும், நாங்கள் சென்ற

வண்டி 15 வருடங்களுக்கு மேலானது என்றும், அதில் இயந்திர கோளராறுகள் இருந்ததால்தான் தகுதிச்சான்று பெற்று பதிவு சான்றை புதுப்பிக்க இயலவில்லை என்றும், மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினால் இந்த விபத்தே நாங்கள் சென்ற வாகனத்தின் இயந்திர கோளராறினால் ஏற்பட்டது என தெரிந்துவிடும் என்பததால்தான் அதனை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

விபத்து சமயத்தில் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி சென்றோம் என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றோம். தெற்கிலிருந்து வடக்காக சென்ற நாங்கள் மகாலெட்சுமி நகருக்கு செல்லவேண்டுமென்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் கேம்ப் அலுவலகம் அருகே உள்ள இ.பி போஸ்ட் ரவுண்டானாவிடம் வலது பக்கமாக திரும்ப வேண்டுமென்று சொன்னால் சரிதான். அவ்வாறு செல்வதற்காக நாங்கள்தான் தெற்கிலிருந்து வடக்காக சென்று திடீரென் வலது பக்கமாக திரும்பி, மேற்கிலிருந்து கிழக்கி நோக்கி சாலை விதிகளை அனுசரித்து ரோட்டின் இடதுபுற ஓரமாக கார் வருவதை பார்த்தும் அதற்குள் சென்றுவிடவேண்டுமென்று வேகமாக சென்று கார்மீது மோதி விபத்தினை ஏற்படுத்திக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல.

ரோட்டின் தவறான திசையில் நாங்கள் சென்றதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் சம்மந்தப்பட்ட காருக்கு முறையான தகுதிச்சான்றும் அதை விபத்து சமயத்தில் ஓட்டிய ஓட்டுனருக்கு முறையான ஓட்டுனர் உரிமமும் இருந்துள்ளது என்றும், நாங்கள்தான் தகுதியற்ற வாகனத்தை தவறான திசையில் ஓட்டிச்சென்று அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் விபத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தானது முழுக்க முழுக்க நாங்கள் சென்ற வாகனத்தின் இயந்திர கோளறினாலும், எனது மகனின் அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளதால் 1ம் எதிர்மனுதாரரோ, அதன் காப்பீட்டாளர் என்ற

அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரரரோ நான் கோரியுள்ள இழப்பீட்டினை எனக்கு செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்லார் என்று சொன்னால் சரியல்ல.

நான் மீன் வியாபாரம் மற்றும் வீட்டு வேலை செய்து மாதம் ரூ.30,000/–ம் சம்பாதித்துவந்ததாக அதிகப்படியான இழப்பீட்டை பெறவேண்டி தவறாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற்றுள்ளேன் என்றும், அங்கு பூரண குணமடைந்த பின்னர்தான் என்னை சிகிச்சையில் இருந்து விடுவித்துள்ளார்கள் என்றும், இந்த விபத்தினால் எனக்கு நிரந்தர அல்லது பகுதி ஊனங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

விபத்து நடந்த இடத்தில் சாலையானது குறுகிய வளைவு சாலை என்பதால், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தபொழுது ரவுண்டானாவிடம் எங்களுக்கு இடதுவுறமாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வரும் வாகனத்தையும் கவனிக்க வேண்டுமென்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சரியாகத்தான் மெயின்ரோட்டில் சென்றோம். இம்மனு தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.06 18:21:45 +0530